REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 2உ திங்கள் (18—10—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 3உ செவ்வாய் (19—10—54) [இதழ் 108

## இலங்கையில் தமிழ் மாணவர்கள் வெளியேற்றப்படுகின்றனர்?

'இலங்கைப் பள்ளிகளிலிருந்து தமிழ் மாணவர்கள் வெளியேற்றப்படுகிறார்களா? என்ற கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், 'இரண்டு பள்ளிகளில்தான் தமிழ் மாணவர்களுக்கு வெளியேற்ற உத்தரவுகள் அளிக்கப்பட்டன' என்றும், 'ஒரு பள்ளியில் 17 மாணவர்கள் பாதிக்கப்பட்டனர்.' என்றும் இலங்கை கல்வி அமைச்சர் பந்தா பாராளுமன்றத்தில் கூறினார்.

பிரதமர் கொத்தலாவலே பேசுகையில், 'சர்க்கார், கல்விக் கொள்கையில் பேதம் எதும் காட்டாது' என்று உறுதியளித்தார்.

சில பள்ளிகள் தமிழ் மாணவர்களை வெளியேற்றுகின்றன என்ற செய்தி இலங்கைப் பத்திரிகைகளில் வெளியாயிற்று.

# சீனர்கள் பெற்றுள்ள நல்வாழ்வும் நாகரீகமும்

## நாடாள்வோர் பெற வேண்டிய நல்ல பாடங்கள்

## செஞ்சீன சென்றுள்ள பண்டித நேரு திரும்பியதும் திட்டங்கள் தருவாரா?

### திட்டம் விரும்பும் காமராசருக்கு அண்ணு தரும் நல்ல யோசனை



"பண்டித நேரு,இப்போது, ஆசியாவின் மிகப் பெரிய நாடான சீனவிற்குச் சென்றிருக்கிறார்; சீனவுக்கு என்றால், எப்படிப்பட்ட சீனவுக்கு? எப்படியிருந்த சீனவுக்கு? எப்படியிருந்த சீன, யார் யாரால், எப்படி எப்படி மாற்றப்பட்டிருக்கிறது?—என்றெல்லாம் காங்கிரசுக்காரர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்;

"சீன, இந்த இந்தியத் துணைக்கண்டத்தில் வாழ்பவர்களைக் காட்டிலும் சுமார் 22 கோடி மக்களை அதிகம் கொண்டது; அதாவது, 60 கோடி மக்கள் சீனவில் வாழ்கின்றனர்; அவர்கள், இன்று, வாழ்வில் நல்ல வளமும், நாகரீகமும் பெற்றவர்களாக வெகு வேகமாக முன்னேறி வருகிறார்கள்; அவர்களது நாட்டிலே இன்று சமதர்ம மணம் கமழ்கிறது; எல்லோருக்கும் வேலை கிடைக்கிறது; அதனால் எல்லோருக்கும் வளமான வாழ்க்கை கிடைக்கிறது;

"இது சீனவின் இன்றைய நிலை! எப்படி இருந்த சீன, இன்று எப்படியாகியுள்ளது?

"பெண்களைப் போலவே, ஆண்களும் நீளமான ஜடை போட்டுக் கொண்டிருந்தனர்; பல தெய்வ வணக்கத்தில் ஈடுபட்டிருந்தனர்; கடவுளைக் காண்பதற்கு, அபின் உண்ணுவதையே வழி என எண்ணியிருந்தனர்; மிகமிகக் கோரமான உருவங்கள் அவர்கள் வழிபாட்டிற்குரியனவாயிருந்தன; இவைகளை மாற்ற—சீன மக்களை நாகரீகம் பெற்றவர்களாக ஆக்க—சன்யாட் - சென் என்ற பேரறிஞன் முயற்சித்தான்.

"'சீனர்களே! பெண்களைப் போலவே, ஆண்களும் ஜடை போட்டுக்கொள்வது எவ்வளவு அநாகரீகம்? அதற்காக நீங்கள் எத்தனை நேரத்தை வீணக்குகிறீர்கள்? அதனால் எவ்வளவு உழைப்பு சக்தி வீணகிறது? கடவுள் வழிபாடென்ற பெயரில் எத்தனை தெய்வங்களை வணங்கி வருகிறீர்கள்? கடவுளைக் காணும் வழியென்று நினைத்து, அபினை அள்ளி அள்ளித் தின்கிறீர்களே! இதுதான் வழிபாடா? இது தேவைதானு?'—என்றெல்லாம் சன்யாட் - சென் ஓயாது, கைவலிக்க வலிக்க எழுதினன்; தொண்டை வற்ற கத்தினன்!

என்றாலும், அந்தச் சீனர்கள், தங்கள் நிலைகளை மாற்றிக் கொள்ளவில்லை; பின்னர், இறுதியாக, சன்யாட் - சென்—'நான் எத்தனை சொல்லியும், நீங்கள் கேட்கவில்லை; இனி, என்னுடைய கருத்துக்களை இளைஞர்களிடம் தந்துவிடுகிறேன்; அவர்கள் நடைமுறைக்குக் கொண்டுவரட்டும்,' எனக் கூறினன்.

"இளைஞர்கள், கையிலே கத்திரிக்கோல் எடுத்தனர்; வீதி வழியே செல்லும் சீன ஆண்மகன் ஜடை போட்டுக் கொண்டிருந்தால் பின்புறமாகச் சென்று, அதை அப்படியே கத்தரித்துவிட்டனர்; ஜடையை இழந்தவன் ஏதோ ஒரு பெரிய பாரம் இறங்கியது போன்ற உணர்வைப் பெற்றான்; ஜடையை எடுத்துவிட்ட பின்னர், தான், பார்ப்பதற்கு லட்சணமாயிருப்பதாக உணர்ந்தான்; அங்கு நாகரீகம் வளர்ந்தது!

"இப்படி சமுதாயத் துறையில் பல தெய்வ வணக்கத்திலீடுபட்டிருந்த சீனர்கள், ஒரு பகுதியினர் கிறித்துவர்களாயும், இன்னுமொரு பகுதியினர் புத்தர்களாயும் மாறி, மறுமலர்ச்சி பெற்றவர்களாய், ஜடையை எடுத்து, நாகரீகம் பெற்றவர்களானது மட்டுமல்ல!

"சீனவில் தொழில்கள் எல்லாம், வெள்ளையரிடமே! ஆட்சி பீடத்திலிருந்த சியாங்-கே-ஷேக்கோ, அமெரிக்காவின் செல்லப் பிள்ளை! இப்படி அந்த நாட்டுச் சொத்தெல்லாம் கொள்ளையிட்டுச் செல்லப்பட்டதுடன், ஏழைகளை — விவசாயிகளை — தொழிலாளிகளைச் சுரண்டிக்கொண்டிருந்த நிலப் பிரபுக்களும், முதலாளிகளும் இருந்தனர்.

"அந்த நிலையெல்லாம்கூட இன்று மாற்றப்பட்டிருக்கிறது; சீனவிலிருந்த அமெரிக்காவின் செல்லப்பிள்ளை சியாங் இப்போது அங்கே இல்லை; மாசேதுங் இருக்கிறார்; தொழில்கள் எல்லாம் இன்று சீனர்களிடமே இருக்கிறது; முதலாளியும், நிலப் பிரபுவும் மக்களைச் சுரண்டிக் கொள்ளையிட முடியாது.

"இப்படி மாற்றப்பட்டிருக்கிறது சீன — மக்கள் சீனமாக! பண்டித நேரு, இந்த மாற்றப்பட்ட மக்கள் சீனவிற்குச் சென்றுள்ளார்.

அவர் திரும்பியதும் இந்த நாட்டில் நமக்கறிவிக்கப்படுவதெல்லாம்—பண்டிதர் பெருமான் சீனத் தலைவருடன் கைகுலுக்கியது; பண்டிதருக்கு சீனர்கள் அணிவித்து மகிழ்ந்த மலர்மாலைகள்; பண்டிதர் கண்ட கேளிக்கைக் காட்சிகள்—இவைகளாகத்தான் இருக்கும்; ஆனால் நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டுமென நினைக்கிற காமராசரும், காங்கிரசாரும், பண்டித நேருவை, "சீனவுக்குப் போனீர்களே, எப்படியிருந்த சீன எப்படியாகியுள்ளது; எப்படி சீனர்கள் நாகரீகம் பெற்றவர்களாய், பல தெய்வ வணக்கத்தை விட்டொழித்தவர்களாய், வாழ்வில் வளம் பெற்றவர்களாய் ஆனர்களோ, அப்படியே இந்த நாடும், நாட்டு மக்களும் மாற நான்கு திட்டங்கள் தாருங்கள்," என்று கேட்கவேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## இதோ, இன்னுமொரு வெற்றி!

### 'கல்லக்குடி' நிலைக்கிறது!

"தி. மு. கழகம் கடந்த 1953 ஜூலைத் திங்கள் 15-ம் நாளன்று துவங்கிய மும்முனைப் போர்களில் ஒன்றான, 'டால்மியாபுரம் பெயரை கல்லக்குடியாக மாற்று' என்ற போராட்டமும் நமக்கு வெற்றி தருகிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தருகிறேன்; நாம் மாற்ற வேண்டுமெனக் கோரிய 'டால்மியாபுரம்' இனி இருக்காது; 'கல்லக்குடி' என்றே அதிகாரபூர்வமாக மாற்றப்படும்—இன்னும் பத்துப் பதினைந்து நாளில்—என்று எனக்கு டெல்லி வட்டாரத்திலிருந்து தகவல் கிடைத்துள்ளது."

—இராயபுரம் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் அண்ணு.

### சுதேசித் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டார்

ஜாம்ஜாவின் சுதேசித் தலைவரான ஷேக் அகமது பென் ஹட்ஜ தாயிபி என்பவர், காசபிளாங்கா எனும் இடத்திலிருந்து சுமார் 45 மைல் தொலைவிலுள்ள ஒரு இடத்தில் சுட்டுக்கொல்லப்பட்டாராம். அவரைச் சுட்டவர் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிகிறது.

## தேடி வரும் வெற்றி!

"இரயில்வே நிலையங்களில் உள்ள ஊர்ப் பெயர் பலகைகளில் வடநாட்டு இந்தி மொழி எழுதப்பட்டிருப்பதை எதிர்த்து திராவிட இயக்கத்தவர் இந்தி எழுத்துக்கள் மீது தார் பூசி கிளர்ச்சி செய்து வருகின்றனர் அல்லவா? இனி, இரயில்வே போர்டுகளில் முதலில் எழுதப்படும் இந்தி எழுத்து, கடைசியில் எழுதப்படும். முதலில் தமிழ்; இரண்டாவது ஆங்கிலம்; மூன்ருவது இந்தி—இவ்வரிசையில், ஊர்ப் பெயர்கள் எழுதப்படும் என்றும், டெல்லி அரசியல் வட்டாரங்களிலிருந்து எனக்கு செய்தி கிடைத்துள்ளது. இதுபற்றிய சர்க்கார் அறிக்கை வெகு அண்மையிலேயே வெளிவரும் என்று எதிர்பார்க்கிறோம்."

—இராயபுரம் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் அண்ணு.

## பதவியிலிருந்து விலக 5 கவர்னர்கள் விருப்பம்!

உடல்நிலை காரணத்தாலும், மற்றும் சில காரணங்களாலும் தாங்கள் பதவியிலிருந்து விலக விரும்புவதாக பம்பாய், பீகார், மத்திய பிரதேசம், அசாம் ஆகிய மாநிலங்களின் கவர்னர்கள் அறிவித்துள்ளனரென்றும், ஆகவே, அவர்களுக்குப் பதிலாகப் புதிய கவர்னர்களை நியமிக்க ஆலோசனைகள் நடந்து வருவதாகவும் தெரிகிறது.

ஆந்திரக் கவர்னர் திருவேதி பம்பாய் கவர்னராக நியமிக்கப்படலாம் என்றும் நம்பப்படுகிறது.

### தேசாய் விலக்கப்படுவார்?

தற்போது இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் தேசாய் இலங்கையிலிருந்து வெளியேற்றப்படுவார் என்றும், அவருடைய பதவியில், பஞ்சாப் மாநில கவர்னர் சி. பி. என். சிங் என்பவர் நியமிக்கப்படலாம் என்றும் தெரிகிறது.

## ஹோ-சி-மின்--நேரு சந்திப்பு

### லாவோஸ் இளவரசருடன் விருந்துண்டார்

இந்தியப் பிரதமர் பண்டித நேரு, வியட்மின் பிரதமர் டாக்டர் ஹோ-சி-மின், மற்றும் இதர வியட்மின் தலைவர்களையும் சந்தித்துப் பேசினர்; அவர்களுடன் விருந்துண்டார்.

இதற்கு முன்னர் பண்டித நேரு லாவோசின் தலைநகரான வியன்டானில் லாவோஸ் பிரதமர், பிரெஞ்சு ஹைகமிஷனர், சர்வதேச மேற்பார்வைக் குழு உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேசினர்.

வியன்டானை விட்டுப் புறப்படு முன்னர், பண்டித நேரு இளவரசர் சாங் அளித்த விருந்தொன்றில் கலந்துகொண்டார்.

### பர்மிய பிரதமரும் சீன செல்வார்

நேரு சீனவுக்குச் சென்றதை
யொட்டி, பர்மி
யூ-நூவும், வருகி
வில் சைனவுக்
லாம் என்று
திருவனம் ெ

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை
சென்னை 18—10—1954 திங்கள்

# 'பெரியதோர்' வெற்றி!

மாவட்டக் கழகத் தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன. தஞ்சை, திருச்சி, தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு, சேலம், கோயம்புத்தூர், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய தேர்தல் நடைபெற்ற மாவட்டக் கழகங்கள் அனைத்திலும், காங்கிரசிற்குப் 'பெரியதோர்' வெற்றி கிடைத்திருக்கிறது. ஸ்தல ஸ்தாபனங்களை—கைப்பற்றுவது எனக் காங்கிரஸ் முடிவு கட்டின காலத்திலிருந்து, இப்பொழுது அக்கட்சிக்கு ஏற்பட்டுள்ள 'வெற்றி' போல் இதற்குமுன் என்றும் ஏற்பட்டது கிடையாது என்பது நிச்சயம்.

பெரும்பான்மையான நாட்டு மக்களின் இதயங்களை இருப்பிடமாகக் கொண்டிருந்த காலத்தில், ஸ்தல ஸ்தாபன தேர்தலில் கலந்துகொண்ட காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட வெற்றியைக் காட்டிலும், மிகப் பலரின் இருதயத்தை விட்டுப் பெயர்ந்து, அவர்கள் பாதங்களைப் பீடமாகக் கொண்டிருக்கும் கீழ்நிலைக்கு வந்துவிட்ட காலத்தில், தேர்தலில் போட்டியிட்ட காங்கிரசுக்கு 'பெரியதோர்' வெற்றி கிடைத்திருக்கிறதென்றால், இந்தத் தலைகீழான முடிவுக்குரிய காரணத்தைக் கண்டறிவது நமது கடமையாகும். இவ்வகையில் நமக்குள்ள கவலையையும், அக்கரையையும்விட, இனிமேலும் காங்கிரசைக் கட்டிக் காக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிற அதன் தலைவர்களுக்கு இருந்தாக வேண்டும்.

மக்களின் அன்புக்குப் பாத்திரமாக இருந்த நாட்களில் காங்கிரஸ் பெறத் தவறிய ஒரு வெற்றியை, மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக்கொண்ட நாட்களில் காங்கிரஸ் பெறுகிறது என்றால், அதில் ஏதோ ஒரு உண்மை—அதுவும் பயங்கரமான உண்மை—மறைந்து கிடக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது. அந்த உண்மையை நன்கு அறிந்துகொண்டால்தான், மேலும் நாட்டு மக்களை வஞ்சித்துவாழ, இனியும் காங்கிரஸ் ஒரு அரிய கருவியாக உதவாது என்ற முடிவிற்குக் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் வருவது எளிதாகும்.

இது ஒரு பக்கம் இருக்க, சென்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட பெரும்பாலான இடங்களை இழந்துவிட்ட காங்கிரஸ் கட்சி, மாவட்டக் கழகத் தேர்தலில் 'பெரியதோர்' வெற்றி பெறுகிறதென்றால், அதில் ஏதோ ஒரு இரகசியம் மறைந்திருக்கத்தான் இருக்கும் என்ற முடிவிற்குத் தானே ஒருவர் வர வேண்டியதாக இருக்கிறது. மூன்றாண்டுகளுக்கு முன்னர் மக்களால் ... தள்ளப்பட்ட காங் ...ண்டும் மூன்றாண்டு ...க்களின் நம்பிக் ...திரமாகிவிட்டது ...ம் அளவில், ஆண்டுகளில்

காங்கிரஸ் அரும்பெரும் நன்மைகளை மக்களுக்குச் செய்யவில்லை என்பதை, அதன் ஆட்சி முறை அறிவுறுத்திக்கொண்டு இருக்கிறது. இருந்தாலும், பொதுத் தேர்தலில் மக்களால் விரட்டியடிக்கப்பட்ட காங்கிரசுக்கு, மாவட்டக் கழகங்களின் தேர்தலில், காங்கிரஸ்காரர்களே 'அதிர்ச்சி' பெறக்கூடிய அளவில் வெற்றி கிட்டியிருக்கிறது.

இந்தப் 'பெரியதோர்' வெற்றி மாற்றத்திற்கான காரணங்களைக் கண்டறிய, ஒருவரும் மூளையைக் குழப்பிக்கொண்டிருக்கத் தேவையே இல்லை. ஒவ்வொரு தொகுதியிலும், பட்டியலில் உள்ள வாக்காளர் எண்ணிக்கையையும், தேர்தலில் பதிவான வாக்காளர் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே போதும், காங்கிரசிற்குக் கிடைத்த 'பெரியதோர்' வெற்றியின் இரகசியம் ஒவ்வொருவருக்கும் புரிந்துவிடும். அதாவது, பட்டியலிலுள்ள வாக்காளர் தொகை நூறு எனக் கொண்டு கணக்கிடுவதானால், சராசரி ஒவ்வொரு தொகுதி தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகர்கள் அனைவருக்குமாகச் சேர்த்து போடப்பட்டுள்ள மொத்த வாக்குகள் 25-லிருந்து 30-க்கு மேல் கிடையவே கிடையாது. அப்படி குறைவாகப் பதிவான வாக்குகளிலும் சராசரி 10 சதவிகித வாக்குகள் செல்லுபடியாகாதவைகளெனத் தள்ளப்பட்டிருக்கின்றன. செல்லுபடியாகாது ஒதுக்கப்பட்ட வாக்குகள் போக, மீதமுள்ள 15 சதம் முதல் 20 சதம் வரையில் உள்ள பதிவான வாக்குகளும், சராசரி ஒவ்வொரு தொகுதியிலும் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சி உள்பட அபேட்சகர்கள் அனைவர்களுக்கும் பதிவாகி உள்ளன. இதில், தேர்தலில் தோற்றவர்களுக்குத் தரப்பட்டுள்ள வாக்குகளின் தொகையை ஒதுக்கிவிட்டு, ஒரு தொகுதியில் வெற்றி பெற்ற காங்கிரஸ் அபேட்சகர் மட்டும் பெற்றுள்ள வாக்குகளின் மொத்த எண்ணிக்கை, 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதத்திற்குள்ளாகவே இருக்கிறது. ஏதோ குறிப்பிட்ட இரண்டொரு தேர்தல் தொகுதிகளில் நீங்கலாக, மற்ற தொகுதிகள் அனைத்திலும்பொதுவாகமேலே எடுத்துக்காட்டியுள்ள மிகமிகக் குறைந்த அளவு வாக்காளர் ஆதரவில்தான் காங்கிரசிற்கு 'பெரியதோர்' வெற்றி கிடைத்திருக்கிறது!

அதாவது, மாவட்டக் கழகங்களின் தேர்தலில் பங்கு கொள்ள உரிமையுடைய மொத்த வாக்குகளில், நூற்றுக்கு ஐந்திலிருந்து பத்துவரைதான் காங்கிரஸ் கட்சி பெற்று, 'பெரியதோர்' வெற்றி அடைந்திருக்கிறது!

பொதுவாக தேர்தலில் பங்கு கொண்ட வாக்காளர் தொகையே குறைவான சதவிகிதமாக இருப்பதும், அதிலும் மிகமிகக் குறைவான சதவிகித வாக்குகளே பெற்று காங்கிரஸ் வெற்றி அடைந்திருப்பதும், காங்கிரஸ் கட்சிக்குப் பெருமை தரக்கூடியது அல்ல.

எனவே, இத்தகு 'பெரியதோர்' வெற்றி கண்டு பூரிப்படைவதைவிட, துக்கப்படுவதே காங்கிரசுக்குப்பொருத்தமுடையதாகும்!

மாவட்டக் கழகங்களின் தேர்தலில் பெரும்பாலான வாக்காளர்கள் ஏன் பங்கு கொள்ளவில்லை என்பதும் பொதுவாகத் தேர்தல்களில் காணப்படும் 'தேர்தல் ஆர்வம்' ஏன் கழகங்களின் தேர்தலில் காணப்படவில்லை என்பதும், ஆராயத் தக்கது! மாவட்டக் கழகத் தேர்தல்களில் வாக்காளரிடை காணப்பட்ட 'தேக்க நிலை'க்கு யார் காரணம் என்பதும் சிந்திக்கத் தக்கது! இவை பற்றி பிறகு ஆராய்வோம்.

## புதிய இடம் கோரிய 400 அகதிகள்

### பர்துவானுக்கு அனுப்பப்பட்டனர்

கிழக்கு வங்க அகதிகள் 400-க்கு மேற்பட்டவர்கள் பெண்கள், குழந்தைகள் உள்பட பர்துவானில் உள்ள ரதி பாட்டி நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது.

இந்த 400 அகதிகளும் தாங்கள் மூன்றாண்டு காலமாக குடி அமர்த்தப்பட்டிருந்த ஒரிசாவிலிருந்து ஆகஸ்டு 30-ந் தேதியன்று திரும்பி வந்துவிட்டவர்கள்.

ஒரிசாவில் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த நிலங்கள் பயிரிடப் பயனற்றவை என்றும், ஆகவே, தங்களை வேறு இடத்தில் குடியமர்த்த வேண்டுமென்றும் கோரி, கல்கத்தாவிற்கு திரும்பி, கல்கத்தாவில் ஆக்லந்து ஹவுசுக்கு அருகாமையில் ஸ்ட்ராண்டு தெருவின் நடைபாதையில் குடியிருந்தார்கள்.

## கிராமந்தோறும் மருத்துவ விடுதி!

கொல்லத்திலுள்ள, 10 படுக்கைகள் கொண்ட ஒரு ஆயுர்வேத மருத்துவமனை ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் திரு—கொச்சி சுகாதார அமைச்சர் பி. கே. குஞ்சு, ஆயுர்வேத மருத்துவ இலாகா மக்களுக்கு அதிக மருத்துவ உதவியளிக்கவும், இந்திய மருத்துவ முறை மக்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்யவும் ரூ. 1 கோடி செலவில் ஐந்தாண்டுத் திட்டமொன்றைத் தயார் செய்துள்ளதாகவும், அத்திட்டத்தின்படி ஒவ்வொரு தாலுகாவிலும் ஆயுர்வேத மருத்துவச்சாலையும், மாநிலத்தைச் சேர்ந்த 548 பஞ்சாயத்துக்களிலும் ஒவ்வொரு ஆயுர்வேத மருத்துவக்கூடமும் ஏற்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார்.

## விவசாயக் குடும்ப விகிதம்: தென்னாட்டில்தான் அதிகம்

### வேலை நாளும் திராவிடர்க்கு மிகக் குறைவே!

தென்னிந்தியாவில்தான் விவசாயத் தொழிலாளர் குடும்பங்களின் விகிதாச்சாரம் அதிகமாயிருக்கிறது. அதாவது, மொத்த கிராமாந்திரக் குடும்பங்களில் **50** சதவிகிதம் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்களாகும்.

இந்தியாவில், மொத்தம் உள்ள **580** லட்சம் கிராமாந்திரக் குடும்பங்களில் **176** லட்சம் குடும்பங்கள் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்களாகும். அந்தக் குடும்பங்களின் சராசரி வருடாந்திர வருமானம் ரூ. **447**-ம், வருடாந்திர செலவு ரூ. **468**-ம் ஆக இருக்கின்றதினால், அவர்களின் பிரச்சினை எத்தகைய பிரமாண்டமானதோர் பிரச்சினை என்பதை நன்றாக உணர்ந்துகொள்ளலாம்.

இந்தியாவிலுள்ள மொத்தம் **350** லட்சம் விவசாயத் தொழிலாளர்களில், **85** சதவிகிதத்தினர் தற்காலிகமாக வேலை செய்வோராகும். மீதியுள்ளவர்கள் மட்டுமே, நிரந்தரமாக அத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள்.

விவசாயத் தொழிலாளரில் தனி நபர் விகித வருடாந்திர வருமானம் ரூ. 104 ஆனாலும், தனி நபர் விகித தேசீய வருமானம் ரூ. 264 ஆகும்.

விவசாயத் தொழில் புரியும் ஆண்களுக்கு ஆண்டொன்றில் சராசரி 189 நாட்கள்தான் வேலை இருக்கிறது.

விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் மொத்தத் தொகையில், ஆண்களின் தொகை 55 சத விகிதமாகும். அவர்கள், ஆண்டொன்றில் போதிய காலத்துக்கு முழு நேர வேலையில்லாமலோ அல்லது குறைந்த பட்ச வேலையிலோ இருக்கிறார்கள். ஆண்டொன்றில் சுமார் 100 நாட்களுக்கு அவர்கள் வேலையில்லாமலேயே இருக்கிறார்கள். மேலும் 29 நாட்களில், அவர்கள் விவசாயம் தவிர்த்த வேறு தொழில்களிலும் ஈடுபடுகிறார்கள்.

வட இந்தியாவில்தான் விவசாயத்திலீடுபட்ட ஆண் தொழிலாளருக்கு அதிகமான வேலைகள் இருக்கின்றன. அவர்கள் ஆண்டொன்றுக்கு சுமார் 289 நாட்கள் வேலை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்காக மொத்தச் சம்பளமாகக் கொடுக்கப்படும் தொகை ரூ. 500 கோடி என்று மதிப்பிடப்படுகிறது.

தோட்டத் தொழிலைத் தவிர்த்த மற்ற விவசாயத் தொழில்கள் மூலம் கிடைக்கும் மொத்த தேசீய வருமானம் ரூ. 4,800 கோடியாகும். இதிலிருந்து, தேசீய மொத்த வருமானத்தில், விவசாயத் தொழிலாளர்களுக்கென 10.5 சத விகிதம் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது.

விவசாயக் குடும்பங்களில் சுமார் 45 சத விகிதத்தினர் கடன்பட்டவர்களாகவே இருக்கின்றனர். சராசரியாக, ஒரு குடும்பத்தின் கடன் தொகை ரூ. 105 ஆகும்.

எனவே, இவற்றிலிருந்து விவசாயத் தொழிலாளர்களுக்கு இன்னும் அதிக வேலை வசதி கிடைக்கச் செய்வது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோர் பிரச்சினை என்பது நன்றாகப் புலப்படுகிறது."

—இவ்வாறு, 800 இந்தியக் கிராமங்களில் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைகள் பற்றி யூனியன் தொழிலாளர் இலாகா நடத்திய அகில இந்திய பரிசீலனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மேற்கு பஞ்சாப் மந்திரி சபையில் நெருக்கடி!

### மந்திரிகளின் சொந்த நிலைதான் காரணமா?

மேற்கு பஞ்சாப் மக்கள் பெருவாரியாக வெள்ளச் சேதத்தினால் வேதனைப்படும் நேரத்தில், அவர்கள் மந்திரி சபையில் நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டுள்ளனவாம்.

இதற்கு அரசியல் காரணங்கள் எதும் இல்லை என்றும், மந்திரிகளுக்குள் ஏற்பட்டுள்ள சொந்த விரோதமே காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

மேற்கு பஞ்சாப் மந்திரி சபையில் உள்ள திறமையான அமைச்சர் நவாப் அலிகான் இசில்பாஷ் மீது மற்ற அமைச்சர்கள் துவேஷம் கொண்டுள்ளனராம்.

இவர் மிகவும் கண்டிப்பான பேர்வழி என்றும், இவரிடம் அணுகிய மற்ற அமைச்சர்கள் பலருக்கு சலுகைகள் தராததால், ரெவினியூ அகதிகள் புனரமைப்பு அமைச்சரான இவர்மீது மற்றவர்கள் வெறுப்புக்கொண்டுள்ளனர் என்றும் தெரிகிறது.

மந்திரி சபையில் நிலவும் கருத்து வேற்றுமைகளைச் சமாளிக்கும் அளவில் முதல் அமைச்சர் நூன் இல்லை எனத் தெரிகிறது.

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட நூன், நீண்ட காலத்திற்குப் பின்னர் லாகூர் திரும்பியிருக்கிறார். அது மட்டுமின்றி, அவர், அண்மையில் ஆங்கில நாடு சென்றார்; உடல் நலம் காரணமாக ஆங்கில நாடு சென்றார் என்று கூறப்பட்டாலும், நூன் தனது மந்திரி சபையில் நிலவும் கருத்து வேற்றுமைகளை மறைத்து மூடவே லண்டன் சென்றார் என்றும் கூறப்படுகிறது.

## பேசும் படங்களிலும் ஊமைப் படங்கள் மேலாம்!

### தன் கருத்தை மெய்ப்பிக்க சார்லி சாப்ளின் முயற்சி!

சினிமா கலைத் துறையில் ஊமைப் படங்களை ஒழித்துவிட்டு, பேசும் படங்களைப் புகுத்தினது கூடாது என்பது உலகப் புகழ் நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளினின் நீண்ட நாள் கருத்தாகும். அக்கருத்தை நிலைநாட்டுவதற்காக, 26 ஆண்டுகளுக்கு முன்பு, 'தி சர்க்கஸ்' என்ற பெயரில் வெளிவந்த, தாம் நடித்துள்ள ஊமைப் படத்தில், பேசும் படம் கூடாது எனும் தம் கருத்தை வலியுறுத்திப் பாடல்களைச் சேர்த்து, திருத்தி அமைக்க எண்ணி இருப்பதாக அவர் அறிவித்தார்.

தம்முடைய 'மாடர்ன் டைம்ஸ்' என்ற ஊமைப் படத்துக்கு இன்றும் பாரீஸ் நகரில் கிடைத்து வரும் பேராதரவு சினிமாத் துறையில் பேசும் முறை நுழைந்திருக்கக்கூடாது என்பதை மெய்ப்பிப்பதாகும் என அவர் கருத்தறிவித்தார்.

'தி சர்க்கஸ்' என்ற சினிமா படம் 1928 ஜனவரி 7-ல் திரையிடப்பட்டதாகும். அதில் நாடோடியாக வாழ்க்கையைத் துவங்கி ஒரு சர்க்கசில் 'விகடனு'க மாற்றம் பெறுவதாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அக்கதாபாத்திரமாக சார்லி நடித்திருக்கிறார்.

சார்லி, பொதுவுடைமை கோட்பாடுடையவர் என்பதற்காக, அமெரிக்கா அவரை நாடு கடத்தியுள்ளது.

மெக்சிகோவில் ஆறு திங்கள் வரையிலாவது தன்னையும், தனது மனைவியையும் தங்கி ஓய்வு பெற அனுமதிக்க வேண்டுமென, அந்நாட்டு சர்க்காருக்கு விண்ணப்பித்துக்கொண்டு இருக்கிறார் சார்லி.

ஒரு பொதுவுடைமை நிறுவனத்தால், சமீபத்தில், தமக்குக் கொடுக்கப்பட்ட சமாதானப் பரிசுத் தொகையான 2,000 பவுனை, பிரான்சிலுள்ள ஏழை மக்களுக்குச் செலவிடும்படியாகச் சார்லி கொடுத்துவிட்டார்.

## மீண்டும் 12 பேருக்கு மரண தண்டனை!

### சர்க்காருக்கு எதிராக சதி செய்தார்களாம்!

**ஈரான் நீதிமன்றத் தீர்ப்பு!**

தெஹ்ரான், அக். 15—

ஈரான் இராணுவ நீதிமன்றம், இன்று, மன்னர் ஷாவை பதவியிலிருந்து நீக்க முயன்றதாகவும், சர்க்காரை கவிழ்க்க சதி செய்ததாகவும் குற்றம் சாட்டி மீண்டும் 12 பேருக்கு மரண தண்டனை விதித்தது.

சமீபத்தில் கைது செய்யப்பட்ட 600 பேர்களில் தண்டனை விதிக்கப்பட்டவர்களில், இவர்கள் இரண்டாவது பிரிவினர்.

சென்ற வாரம் மரண தண்டனை விதிக்கப்பட்ட 12 பேரும் அப்பீல் செய்து, முடிவிற்காகக் காத்திருக்கின்றனர்.

அடுத்த வாரம் மூன்றாவது பிரிவினரின் மீது வழக்கு நடைபெறும்.

## சந்தேகமேயில்லை!

### இட்லர் தற்கொலை செய்து கொண்டார்!

**நீதிமன்றம் தரும் 'சர்டிபிகேட்'**

'இட்லர் சந்தேகத்திற்குத் துளியுமிடமின்றி செத்துப் போய்விட்டார்' என்று இங்குள்ள மாவட்ட நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்துள்ளதாகத் தெரிகிறது.

ஆஸ்திரிய நீதி மன்றத்தின் வேண்டுகோளின்படி, இட்லரின் மரணம் பற்றிய 'சர்டிபிகேட்' ஒன்றைத் தந்த அந்த நீதி மன்றம் தனது 'சர்டிபிகேட்டி'ல் குறிப்பிட்டிருப்பதாவது :—

"இதுவரையில் நடத்தப்பட்ட புலன் விசாரணைகளின்படி, இட்லர், தனது பெர்லின் நகர மாளிகையில் கடந்த 1945 எப்ரல் 30-ந் தேதியன்று தற்கொலை செய்து கொண்டார் என்பதில் துளியும் சந்தேகம் இல்லை."

## தேயிலைத் தொழில் நிலை

### ஆராய குழு நியமனம்

இந்தியாவிலிருந்து ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்யப்படுகிற 420 மில்லியன் பவுண்டு தேயிலையில் 200 மில்லியன் பவுண்டுகளுக்கு மேல் பிரிட்டனுக்கே செல்கிறது.

இப்போது பிரிட்டனில் விற்பனை செய்யப்படும் தேயிலையின் தரத்தை உயர்த்தவும், அந்த வியாபாரத்தை அபிவிருத்தி செய்யவும் அவசியமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக இந்திய சர்க்கார் கருதுகிறதாம்.

ஆகவே, இந்தியாவில் தேயிலைத் தொழிலின் எல்லா அம்சங்களையும் ஆராய்ந்து அறிக்கை ஒன்று தர இந்திய சர்க்கார் குழு ஒன்றை நியமித்துள்ளது.

## இலங்கை மத்திய பாங்கி கவர்னர் விலக்கப்படுகிறார்!

இலங்கையின் மத்திய பாங்கி கவர்னராயிருந்த ஜெயவர்தனே என்பவரை பதவியிலிருந்து விலக்கிவிட உத்திரவிடுமாறு இலங்கை அரசாங்கம் கவர்னர் - ஜெனரலுக்கு சிபாரிசு செய்ய முடிவு செய்துவிட்டதாம்.

கவர்னரின் நடத்தை பற்றி நடைபெற்ற விசாரணைக்குப் பின்னர்தான் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது எனத் தெரிகிறது.

இப்போது கவர்னரின் செயலாளராகப் பணியாற்றும் சர்ஆர்தர் ராண சின்கா கவர்னராக உயர்த்தப்படலாமெனவும் தெரிகிறது.

ஜெயவர்தனாமீது 49 குற்றச்சாட்டுகள் இருந்தனவாம். அவர் உதவி கவர்னர் - ஜெனரலாக இருந்த நேரத்தில் பல தனிப்பட்ட நபர்களிடமும், பாங்கிகளிடமும் ஏராளமான கடன் வாங்கினார் என்பதும் ஒரு குற்றச்சாட்டு!

## இங்கிலாந்தில் பொருள் நெருக்கடி?

### இந்தியத் துணி இறக்குமதியின் விளைவு!

"இந்திய ஆலைத் துணிகள் தொடர்ந்து இங்கிலாந்தில் இதே அளவில் இறக்குமதி செய்யப்படுமானால், லங்காஷயரின் நெசவாலைத் தொழிலுக்கு பெரும் நெருக்கடி ஏற்படக் கூடும்,"

என்று, பிரிட்டனின் தொழிற் சங்கக் காங்கிரசில் பேசப்பட்டது.

"ஆங்கிலோ - ஜப்பானிய வியாபார ஒப்பந்தம் அண்மையில் ஏற்பட்டதற்காக இப்போது வருந்த வேண்டியதாயிருக்கிறது; லங்காஷயருக்கு, வழக்கமாக வெளிநாடுகளில் கிடைத்துக் கொண்டிருந்த 'பரம்பரை' மார்க்கெட்டுகளைப் பிடிப்பதில் வெகுவான கஷ்டங்களிருக்கின்றன," என்று, லேவிஸ்ரிட் என்பவர், தொழிற் சங்கக் காங்கிரசின் உற்பத்தி இலாக்காவிடம் தந்துள்ள அறிக்கையில் கண்டிருப்பதாகத் தெரிகிறது.

அவ்வறிக்கையில், லேவிஸ்ரிட் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"ஜப்பானிய துணிகள் பிரிட்டனுள் நுழைவதினால் தீங்கு இல்லாமற் போயினும், உதவி யிருப்பதாக நிச்சயமாகச் சொல்ல முடியாது; ஆனால், அதே நேரத்தில், வெளிநாட்டில் நமக்கு மார்க்கெட்டுகள் கிடைப்பது துர்லபமாயிருக்கிறதென்ற அச்சத்துடன் உள்நாட்டிலும், மிக மலிவாகக் கிடைக்கிற இந்தியத் துணிகளுடன் நாம் போட்டிபோட வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது; எனவே, இன்னும் இந்தியத் துணியை இறக்குமதி செய்வதை அதிகப்படுத்துவது நெருக்கடியை முற்றச் செய்யும்; சமுதாயத்தையும், பொருளாதார ஒட்டத்தையும் பாதிக்கிற மிக முக்கியமான இந்தப் பிரச்சினையில் லங்காஷயர் அரசாங்கத்தின் உதவியைத்தான் நாடுகிறது."

## வடபோர்னியோவில் அமைதி குலைவு!

### தேசிய உணர்வு கொழுந்து விட்டெரிகிறதாம்!

பிரிட்டிஷ் வடபோர்னியோவில், தேசியவாதிகள் சட்ட விரோதமான செயல்களில் ஈடுபட்டுள்ளனராம்.

'சேராவாக்' எனும் பகுதியில், இத்தகு குழப்பங்கள் மிகுந்திருப்பதாக இந்தோனேஷிய செய்தி நிறுவனமான 'அண்டாரா,' குறிப்பிடுகிறது.

வடபோர்னியோவில் தேசிய உணர்வு கொழுந்து விட்டெரிகிறது. அந்த உணர்வின் விளைவாகவே இந்தக் குழப்பங்களும், கலகங்களும் உருப்பெறுகின்றனவாம்.

இந்தோனேஷிய பிரிட்டிஷ் எல்லைகள், பிரிட்டிஷ் இராணுவத்தினரால் வெகுவாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றனவாம்.

வடபோர்னியோவில் உள்ள கூச்சிங் பகுதியில் சீனர்கள் பயின்று கொண்டிருந்த பள்ளி ஒன்று மூடப்பட்டதைத் தொடர்ந்து பல சம்பவங்கள் நடைபெற்றதாயும் சொல்லப்படுகிறது.

கம்யூனிசம் எருவிட்டு வளர்க்கப்படும் இடமாக அந்தப் பள்ளிக்கூடம் மாறி வந்ததினாலேயே மூடப்பட்டதாம்.

## மலேரியாவுக்கு...

### சீனு கண்டுள்ள மருந்து

சீன மருத்துவ அறிஞர்கள் கண்டுள்ள மர உப்பு ஒன்று, மலேரியாவைக் குணப்படுத்த உபயோகிக்கும் 'குனைன்' மருந்தினைக் காட்டிலும் பத்து மடங்கு வீரியமும், சக்தியும் வாய்ந்தது என்று மாஸ்கோ ரேடியோ அறிவித்துள்ளதாம்.

அந்த மருந்து மாஸ்கோ மருத்துவ நிபுணர்களுக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டிருக்கிறதாம்!

# செய்திச் சுருள்

### திராவிட பஞ்சாலை தொழிலாளர் கழகம்

10—10—54 மாலை 4 மணிக்கு கோவை தியாகராயர் படிப்பகக் கட்டிடத்தில் தோழர் சு. கண்ணன் தலைமையில் நடைபெற்ற பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஆலோசனைக் கூட்டத்தில், "திராவிட பஞ்சாலை தொழிலாளர் கழகம்" அமைப்பதென முடிவு செய்யப்பட்டது. தொழிற் சங்கங்களை அமைக்கும் முறைகள் பற்றியும், மாற்றுச் சங்கங்களின் நிலை குறித்தும், தலைமையுரையில் தோழர் கண்ணன் விளக்கிப் பேசினார். பின்னர் சே. அ. ராசமாணிக்கம், திருமூர்த்தி ஆகியோர் கழகத்தின் செயல் முறைகளுக்கு யோசனைகள் பல தெரிவித்துப் பேசினர்.—பின்னர், தோழர் கண்ணன் உட்பட 5 பேர் கொண்ட நிர்வாகிகளும், 5 பேர் கொண்ட குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டு, மீண்டும் 25—10—54ல் கூடுவதென முடிவு செய்யப்பட்டது.

### மதுரை— அனுப்பானடி பாரதிதாசன் படிப்பகம்

10—10—54ல் மேற்படி படிப்பக உறுப்பினர் கூட்டம், தோழர் ஏ. வீமன் தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் ;— செயலாளர்: எஸ். வீரபத்ரன்; துணைச் செயலாளர்: எஸ். இராசு; பொருளாளர்: பெ. அ. இராசன்; விளம்பர உறுப்பினர்கள்: எஸ்.கே.நாதன், இரா. அரங்கண்ணல்; செயற்குழு உறுப்பினர்கள்: அறிவழகன், கே. வீமன், ஏ. தங்கையா, வைரவன், தங்கவேல்; நகர கிளைப் பிரதிநிதிகள்: எம். சுப்ரமணியன், சி. இராதாமணாளன். பின்னர், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

### கர்கி-பூனு வள்ளுவர் படிப்பகம்

10—10—54 மாலை 5 மணிக்கு தோழர் கருப்பராசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி படிப்பகத்தின் 'பகுத்தறிவு நூற்கள் சேர்க்கும் விழா'வில், வள்ளுவர் பற்றியும், படிப்பகம் பற்றியும், வெளிநாடுகளில் வாழும் திராவிட மக்கள் எவ்விதம் காரியமாற்ற வேண்டும் என்பது பற்றியும், தோழர்கள் இரா. இராவணன், மறைமணி, எம். ஏ. வேதகிரி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### வேலூர் திருவள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்

3—10—54 பகல் 10 மணியளவில் தோழர் பிரகாசம் தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்றத்தின் வாராந்திரக் கூட்டத்தில், 'ஒற்றுமை' எனும் பொருள் பற்றி புலவர் கூத்தரசன், முல்லை வேந்தன், கருத்தோவியன், பாண்டியன், இலக்குவன், கணேசன், அருள்மணி ஆகியோர் பேசினர்.

### கோவை சிந்தனை படிப்பகம்

10—10—54ல் தோழர் பாலு தலைமையில் நடைபெற்ற மேற்படி படிப்பகத்தின் ஆண்டு விழாவில், செயலாளர் க. வெற்றிவேந்தன் அனைவரையும் வரவேற்று ஆண்டறிக்கை வாசித்தபின், தோழர்கள் சிங்காரம், சி. டி. தண்டபாணி, இமயவரம்பன், தோழியர் ராஜம் நடராசன் ஆகியோர் படிப்பகத்தின் சாதனைகளை எடுத்துக்கூறினர். சொற்போட்டி, இசைப் போட்டிகளும், இன்னிசைக் கச்சேரியும், மாணவிகளால் ஒரு நாடகக் காட்சியும் நடைபெற்றன. வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

# கழகச் செய்திகள்

## தி. மு. க. அலுவலகத் திறப்புவிழா

திருவனந்தபுரம், அக். 15—

10—10—54 மாலை 5 மணிக்கு தம்பானூர் ஆண்டாள் ஹாலில், தோழர் சி. பி. செல்வம் அவர்கள் தலைமையில் தி. மு. கழக அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது. தோழர் கே. எச். எம். சுபேர் கழகக் கொள்கைகளை விளக்கி, திராவிட நாடு பிரிவினையை வலியுறுத்தி நீண்டதோர் சொற்பொழிவாற்றி, பின்னர், கழகக் காரியாலயத்தைத் திறந்துவைத்தார். தி' மு. கழக பொருளாளர் தோழர் கே. சுப்பராயலு கழகக் கொடி ஏற்றிவைத்தார்.

### பொன்னேரி—ஆரணி தி. மு. கழகம்

11—10—54 மாலை 6-30 மணியளவுக்கு செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரி வட்டம் ஆரணியில் தோழர் மா. சு. சம்பந்தம் தலைமையில் நடைபெற்ற தி. மு. க. (கிளை) துவக்கவிழாவில் தோழர் இரா. நெடுஞ்செழியன் கொடியேற்றி வைத்து, மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபடுவது பற்றி நீண்டதோர் விரிவுரையாற்றினார். தோழர்கள் கோபால், ப. சு. மணி ஆகியோரும் பேசினர்.

### சோலைமலை (மூணர்) தி. மு. கழகம்

சோலைமலைப் பள்ளியில் தோழர் இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், கவிமணி தேசிகவிநாயகம் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேறின.

### தோகைமலை (திருச்சி) தி. மு கழகம்

7—10—54 மாலை 6 மணிக்கு; இவ்வூர் ஆசாத் மைதானத்தில், தோழர் அண்ணாவி தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் திராவிட நாடு பற்றியும், தற்கால அரசியல் நிலை பற்றியும் சொற்பொழிவாற்றினார்.

### தாப்பாய் தி. மு. க. (கிளை)

"கடந்த மாவட்டக் கழகத் தேர்தலில் கழகக் கொள்கைகளுக்கும், தீர்மானத்திற்கும் விரோதமாக நடந்துகொண்டதால் தோழர் எஸ். அருணசலம் என்பவர் இரண்டாண்டு காலம் உறுப்பினர் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்," என்று செயலாளர் தோழர் மு. தெய்வீகன் அறிவிக்கிறார்.

## புதிய ஆராய்ச்சி!

அகில இந்திய ரேடியோவின் ஆராய்ச்சி இலாகாவினர் மண்ணெண்ணெய் விளக்கு மூலம் இயங்கக் கூடிய ஒரு ரேடியோவை கண்டுபிடித்திருக்கின்றனரென்றும், தினம் ஒன்றுக்கு 3 மணிநேர வீதம் அந்த ரேடியோ பயன்படுத்தப்பட்டால், மாதம் ஒன்றுக்கு ரூ. 3-தான் செலவாகுமென்றும் அதிகார பூர்வமாகத் தெரிகிறது.

### பிறப்பு

மதுரை—தல்லாகுளம் கைவல்யம் நினைவுப் படிப்பகச் செயலாளர் தோழர் சோ. பாண்டுரங்கன் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் இராசலெட்சுமி அம்மையாருக்கு 11—10—54ல் ஓர் பெண் மகவு பிறந்தது. தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு அளிக்கப்பட்டது —வரப்பெற்றோம்—நன்றியுரியது—பொறுப்பாளர்.

### மொல்லம்பட்டி தி. மு. க. பொதுக் கூட்டம்

9—10—54ல், தி. மு. கழகச் சார்பில் தோழர் வெள்ளைச்சாமி தலைமையில் நடைபெற்ற திராவிட நாடு பிரிவினை விழாக் கூட்டத்தில் தோழர் சி. பி. சிற்றரசு திராவிட நாடு பிரியவேண்டியதன் அவசியம் பற்றி விரிவுரையாற்றினார்.

### துரப்பு—வேளாபூண்டி தி. மு. க. ஆண்டு விழா

9—10—54ல் தி. மு. கழகத்தின் முதலாவது ஆண்டுவிழா தோழர் எஸ். இராசகோபால் தலைமையில் நடைபெற்றது. தோழர் து சுந்தரம் கழகக் கொடியை ஏற்றி வைத்து, கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்.

### உட்கோட்டையில் தி. மு. கழகம் அமைப்பு

3—10—54ல், உட்கோட்டை தொட்டிக்குளம் .கடாரம்] கொண்டான், ஆயுதக்கலம், உயுத்தப்பள்ளம் ஆகிய ஊர்களின் பிரதிநிதிகளைக் கொண்டு, தி. மு. கழகம் நிறுவப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் : செயலாளர்: த. சந்திரகாசு; துணைச் செயலாளர்கள்: கோ. இராகவன், த. முத்தையன்; பொருளாளர் : சு. இராமசாமி; விளம்பர உறுப்பினர்: சி. கலியபெருமாள்; மாவட்டப் பிரதிநிதி: கோ. இராகவன்; செயற்குழு உறுப்பினர்கள்: தோழர்கள் அரங்க நெடுமாறன், தொ. சின்னத்துரை, பூ. தென்னரசு, மா. கோவிந்தராசு, சி. பிச்சமுத்து, கோ. சுந்தரராசு, நா. தாமரைச் செல்வன்.

நவம்பர் திங்கள் இறுதிக்குள் கழகத் துவக்க விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

### பழையவத்தலக்குண்டு தி. மு. கழகம்

4—10—54 இரவு 8 மணியளவில், தோழர் வை. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டபின், கவிமணி தேசிகவிநாயகம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், விரைவில் கழகச் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

### சேலூர் தி. மு. கழகம்

2—10—54 இரவு 7-30 மணியளவில் தோழர் வி. இ. செயராமன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு ஓர் வரவேற்பு வாசித்தளிக்கப்பட்டது. பின்னர் தோழர்கள் எஸ். ஏ. கைலாசன், போளூர் கே. சுப்பிரமணியம், அ. கருத்தோவியன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் திராவிட நாடு பிரிவதின் அவசியம் பற்றி தக்க ஆதாரங்களுடன் சொற்பொழிவாற்றினர்.

### சென்னை—சூளை தி.மு.க.

9—10—54 இரவு நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், குழுவில் காலியான இடங்களுக்கு தேர்தல் நடத்தி தோழர் இராச ரத்தினம் துணைச் செயலாளராகவும், போ. வெங்கட்டு மாவட்டப் பிரதிநிதியாகவும், பா. செயராமன் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் கவிமணி தேசிகவிநாயகம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், வரவு—செலவு கணக்குகள் சரி பார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டும், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

# பிரெஞ்சிந்திய விடுதலை சரிதத்தில் ஒரு பொன்னேடு!

## மார்டின் முதல் மெண்டஸ் பிரான்ஸ் வரை நீடித்த ஆதிக்கம் மறைகிறது

## வாழ்க விடுதலை விரும்பிகள்— வளர்க தாய்நாட்டுப் பற்று!

சென்னை, அக். 18—

240 ஆண்டுகளாக அன்னியர்கள் பிடியில் சிக்கியுள்ள பிரெஞ்சிந்தியக் காலனிகளில், இன்று, முதல் தடவையாக விடுதலை கீதம் பாடப்படும். இந்த விடுதலை விழாவை, கீழூரில் இன்று கூடும் பிரெஞ்சிந்திய சட்டசபை உறுப்பினர்கள், இந்தியாவுடன் இப்பகுதிகள் இணைய வேண்டுமென்ற தங்கள் தீர்ப்புடன் ஆரம்பித்து வைக்க இருக்கிறார்கள்.

இதன் மூலம், 196 சதுர மைல்களில் வாழும் 3,20,000 மக்கள் மாற்றுநாட்டு ஆதிக்கத்தின் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. விடுதலைப் போரின் சரித்திரத்தில் இது ஒரு நன்னாளாகும்.

இந்திய உபகண்டத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள புதுச்சேரியில், பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திற்கு பிரான்காய்ஸ் மார்டின் என்பவரால் 1674-ம் ஆண்டில் கல்நாட்டு விழா செய்யப்பட்டது.

அதுமுதல், புதுவை நகரம், அன்னிய நாட்டவர்களான ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள் ஆகியோரின் ஆதிக்கத்தைப் பரீட்சை செய்யும் நகரமாக விளங்கியது. அடிக்கடி நடைபெற்ற போர்கள், சமாதான ஒப்பந்தங்கள் இவைகளின் மூலம் 1693-ல் டச்சுக்காரர்களிடமும் 1699-ல் பிரெஞ்சுக்காரர்களிடமும், 1761-ல் ஆங்கிலேயர்களிடமும், 1765-ல் பிரெஞ்சுக்காரர்களிடமும், 1793-ல் பிரிட்டிஷ்காரர்களிடமும், மீண்டும் 1814-ல் ஆங்கிலேயர்களுக்கும் - பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே பாரிசில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி மீண்டும் பிரெஞ்சுக்காரர்களிடமும், இப்படி மாறிமாறி இறுதியில் பிரெஞ்சுக்காரர்களிடம் சிக்கியது.

புதுவையின் சரித்திரத்தில் டியூப்ளே, சர் அயர்கூட், பிரத்வொயிட் போன்ற அந்நிய தளபதிகளின் பெயர்கள் காணப்படுகின்றன.

கரைக்கால், ஏனும் என்ற இரு பகுதிகளையும் தஞ்சையில் ஆட்சி புரிந்து வீழ்ந்துபோன சரபோஜா மன்னரிடமிருந்தும், ஐதராபாத் நிஜாமான முசாபர் ஜங்கிடமிருந்தும் பெற்றனர்; ஏனும், 1726-ல் படகாரா அரசரிடமிருந்து பிரெஞ்சுக்காரர்களுக்குக் கிடைத்தது.

புதுவை, காரைக்கால், மாகி, ஏனும் என்ற இந்த நான்கு பகுதிகளுக்கும் மின்சாரம், தபால் - தந்தி, ரயில்வே போன்ற வசதிகள் எல்லாம் இந்திய சர்க்காரால் அளிக்கப்படுகின்றன.

இந்தப் பகுதிகளில் முதல் விடுதலை முழக்கம் 1947 - ஆகஸ்டு 15-ல் கேட்டது. அன்று, இப்பகுதிகளில், இந்தியக் கொடி ஏற்றப்பட்டு, மக்கள், பிரெஞ்சுக்காரர்களை வெளியேறும்படி கோரினர். 1950-ல், சந்திர நாகூரின் விடுதலைக்குப் பின்னர் இப்பகுதியில் விடுதலை இயக்கம் வலுத்து வந்தது.

சென்ற மார்ச் திங்கள் 23-ம் நாள், பிரெஞ்சிந்திய அமைச்சர்கள் பலர் தங்கள் பதவியை இராஜினமா செய்தனர்.

ஏனும், மதுக்கரை, நெட்டப்பாக்கம் போன்ற பகுதிகள் விடுதலை பெற்றன. இப்பகுதிகளில் விடுதலை சர்க்கார்கள் இப்போது இயங்கிவருகின்றன.

புதுடில்லியிலும், பாரிசிலும் தொடர்ந்து இரு சர்க்கார்களுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதின் விளைவாக பிரெஞ்சுக்காரர்கள் இப்பகுதிகளை விட்டு வெளியேற ஒப்புக்கொண்டார்கள்.

**பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் விடுதலைப் போரில் ஈடுபட்டு** வாழ்வையிழந்தவர்கள் பலர். இந்த விடுதலைக்காக இப்பகுதிகளில் முன்னின்று பணி செய்த பல்வேறு அரசியல் இயக்கங்களில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் தங்கள் பணியினை செவ்வனே செய்தனர். பிரெஞ்சுக்காரர்களின் அடக்கு முறைக்கு உட்பட்டு தடியடி பட்டோரிலும், கைது செய்யப்பட்டோரிலும், தி. மு. கழகத்தவர்கள் பலர் உள்ளனர்.

புதுவை நகரில், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களும், பிரெஞ்சு கலாசாரத்தை நினைவூட்டும் பல நிலையங்களும் உள்ளன.

இந்த விடுதலைக்கு தனது ஒப்புதலை அளிப்பதன் மூலம் பிரான்சின் பிரதமர் மெண்டேஸ் பிரான்ஸ், விடுதலை விரும்பிகளின் பாராட்டுதல்களைப் பெறுகிறார்.

இந்த விடுதலைக்காக உழைத்து உருக்குலைந்து போன மக்களும், துயர்பட்டோரும், மக்களின் வாழ்த்துகளுக்கு உரித்தாகுகின்றனர்.

★

## கீழூர் கூட்டம் வெற்றி பெறும்!

## பிரெஞ்சிந்திய சோஷலிஸ்டுக் கட்சியின் தனிப்பட்ட முடிவு

## பிரான்ஸ் ரூ. 3 கோடி நஷ்டஈடு பெறும்

மதுக்கரை, அக். 17—

இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக, தான் ஆதிக்கம் செலுத்தி வந்த பகுதிகளிலிருந்து வெளியேற ஒப்புக் கொண்டுள்ள பிரெஞ்சுக்காரர்களுக்கு இந்திய சர்க்கார் பல தரப்பட்ட இனங்கள் மூலமாக சுமார் ரூ. 3 கோடி நஷ்டஈடு கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறது என்று தெரிகிறது.

கீழூர் காங்கிரசில் கலந்துகொள்ள இருக்கும் உறுப்பினர்கள் 183 பேரில், பிரெஞ்சிந்திய சோஷலிஸ்டு கட்சியின் அழைப்பின் பேரில் 170 பேர் கலந்துகொண்ட கூட்டம் ஒன்று நெட்டப்பாக்கத்தில் தோழர் ஏ. எஸ். பக்கிரிசாமி பிள்ளையவர்களின் தலைமையில் கூடி ஏகமனதாக இணைப்பை ஆதரித்து வாக்களித்தனர்.

பிரெஞ்சிந்திய சோஷலிஸ்டு கட்சியைக் கலைத்து அதன் உறுப்பினர்கள் இந்திய காங்கிரசின் உறுப்பினர்களாக தங்கள் கட்சியை இந்திய காங்கிரசுடன் இணைத்துவிடுவது என்று நெட்டப்பாக்கம் கூட்டத்தில் முடிவு செய்தனர் என்று தெரிகிறது.

கீழூரில் இணைப்பு வாக்கெடுப்புக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டன. கீழூரில் பாதுகாப்பு. ஏற்பாடுகள் மும்முரமாக உள்ளன.

இன்று காலை 10 மணிக்கு துவங்கி, மாலை 3 மணிக்கு இக்கூட்டம் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரெஞ்சிந்தியா பற்றி இரு நாடுகளிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் நகல், பிரதிநிதிகளுக்கு, கூட்டம் ஆரம்பிப்பதற்கு சிறிது நேரத்திற்கு முன்புதான் தரப்படும் என்று தெரிகிறது.

"இப்போது இரு நாட்டிற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் நடைமுறைகளின்படி, இந்தியாவுடன், பிரெஞ்சிந்தியப் பகுதிகள் இணைவதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?" என்ற கேள்வி அச்சிடப்பட்ட இரண்டு வாக்குச் சீட்டுகள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும்; அவை ஒன்றில், அசோக சக்கரம் அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டில் 'ஆம்' என்று அச்சிடப்பட்டிருக்கும்; மற்றொன்றில், மூன்று வண்ண பிரெஞ்சு சின்னமொன்றில், 'இல்லை' என்றும் அச்சிடப்பட்டிருக்கும்.

உறுப்பினர்கள் ஒரு வாக்குச் சீட்டை பதிவு செய்து, மற்றொன்றை தங்களிடமே வைத்துக் கொள்ள வேண்டுமாம்.

வாக்கெடுப்பின் முடிவை கூட்டத் தலைவர் ஒலிபெருக்கி மூலம் வெளியில் உள்ளவர்களுக்கு அறிவிப்பார். இதற்கு 5 மணி நேரமாகும்.

## 27,000 துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் நீடிக்கிறது!

### 230 கப்பல்கள் தூங்குகின்றன!

லண்டன், அக். 17—

உலகத்தின் மிகப் பெரும் துறைமுகங்களில் ஒன்றான லண்டன் துறைமுகம் நிசப்தமாகக் காட்சி தருகிறது.

அங்குள்ள துறைமுகத் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் கடந்த வார முதல் வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்து ஏற்கனவே செய்தி வெளியாகியுள்ளது.

கடைசியாக வேலை செய்து கொண்டிருந்த, பாரங்கயிறு இழுப்போர் சுமார் 4,500 பேர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் மொத்தம் வேலை நிறுத்தத்தில் பங்கு பெறுகிற தொழிலாளரின் எண்ணிக்கை 27,000-மாக உயர்ந்துள்ளது.

துறைமுகத்தில் சுமார் 133 கப்பல்கள் தூங்கிக்கொண்டிருக்கின்றன. ஒரு கப்பலில் கூட வேலை நடைபெறவில்லை.

இந்த வேலை நிறுத்தம், நிலக்கரி, பெட்ரோல் ஆகியவை மக்களுக்குக் கிடைப்பதைத் தடை செய்யும் என்ற அச்சத்தைத் தந்துள்ளதாம்.

மேலும் இந்த வேலை நிறுத்தம் வேறு பல துறைமுகங்களுக்கும் பரவுகிறதாம்.

லிவர்பூல், சௌத்தாம்டன் ஆகிய துறைமுகத் தொழிலாளர்கள், வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது பற்றி இரண்டொரு தினங்களில் முடிவு செய்யவிருக்கிறார்கள்.

இதற்கிடையில் லண்டன் நகரத்தில் ஓடிக்கொண்டிருக்கும் பஸ் போக்குவரத்தும் வெகுவாகப் பாதிக்கப்படவிருக்கிறது.

நாளையதினம், இன்றுவரை ஓடிக்கொண்டிருக்கிற 7,600 பஸ்களில் 4171 பஸ்கள் ஓடாது என்றும் தெரிகிறது. இதனால் நகரத்தின் போக்குவரத்து வசதிக்கு வேறு ஒருபெரும் நெருக்கடி விளையவிருக்கிறதெனத் தெரிகிறது.

இதேபோல் தேம்ஸ் நதியில் ஓடும் 100 கப்பல்களில் பழுது வேலை. செய்யும் சுமார் 8,000 - தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ள வேலை நிறுத்தமும் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது. கப்பல்களில் ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் நடைபெறாமையால், லண்டன் நகரின் பெரும் தொழிற்சாலைகள் பலவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இன்னும், உணவுப் பண்டங்கள், யந்திர சாதனங்கள் ஆகியவையின் ஓட்டமும் குறைந்து விடக்கூடும் என்ற அச்சம் பலப்பட்டு வருகிறதாம்.

### லிபியா இளவரசன் மகன் கைது.

லிபியா சர்க்காரை எதிர்த்துச் சதித் திட்டம் செய்ததாக, லிபிய இளவரசருடைய மகனையும், அவரோடு மற்றும் ஐந்து பேர்களையும் லிபியா மன்னர் கைது செய்ய உத்திரவிட்டுள்ளாராம்.

## பொதுச்செயலாளர் அண்ணா முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பண்டித நேரு போயிருப்பதோ, மாற்றம் கண்டுள்ள மக்கள் சீனாவிற்கு; ஆனால், போய்விட்டுத் திரும்பி வருவதோ விடுதலை பெற்றதல்ல—வெள்ளையனால் விடுவிக்கப்பட்ட இந்தியாவிற்கு—அமெரிக்க டாலருக்கும், டாட்டா, பிர்லாக்களுக்கும் கொஞ்சம் கொஞ்சமாய் ஈடுசெய்யப்பட்டு வரும் இந்தியாவுக்கு! கும்பமேளாவும், கும்பகோணம் மாமாங்கமும், கோட்டுமுழக்கோடு நடைபெறும் இந்தியாவுக்கு!

"மக்கள் ஆட்சியை நிலைநாட்டிய சமதர்ம நாடாக விளங்கும் சீனவுக்குச் சென்று திரும்பும் பண்டிதரை வரவேற்பதே டாட்டாவும், பிர்லாவும்தானே! இந்த நிலை மாற, பண்டிதர் சீனவுக்குச் சென்று திரும்பிய பலனாக, என்ன தரப்போகிறார், நாட்டவர்க்கு?

"ரயிலில் பிரயாணம் செய்கிற மனிதனுக்கும், பல்லிக்கும் வித்தியாசம் வேண்டாமா? இங்கிருந்து ஒரு மனிதன் திருச்சி சென்று திரும்பினால், தன் வீட்டிற்கு ஏதேனும் பொருள் வாங்கி வருவான்; பல்லியும் இவன் கூடவே பிரயாணம் செய்து திரும்பும்; பயன் என்ன? அதைப்போல பண்டிதர் சீனா சென்றிருக்கிறார்; சென்று திரும்புபவர் என்ன கொண்டுவருகிறார் பார்க்கலாம்.

**"சீன நாட்டின் மகத்தான மாறுதலுக்குக் காரணம் என்ன என்பதை பண்டிதரும், காங்கிரஸ்காரர்களும், காமராசரும் உணர்ந்து, இந்த நாட்டுக்கு அத்தகைய ஒரு மாறுதலைப் பெற்றுத் தருவார்களா?"**

—இவ்வாறு தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் 17—10—54 ஞாயிறன்று மாலை, தி. மு. கழக தலைமைக் கழகமருகில் இராயபுரம் 2-வது வட்ட தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை இராயபுரம் 2-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் இன்று மாலை 6 மணி யளவில் தலைமைக் கழகத்திற்கு வெகு அருகாமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமை தாங்கினார்.

தோழர்கள் வி. எஸ். கோவிந்தராசன், அ. பொன்னம்பலனார், ஆகியோர் பேசியதும் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினர்.

பொதுச்செயலாளருக்கு ஏராளமான மலர்மாலைகளும், கைத்தறித் துணியும் அணிவிக்கப்பட்டன.

பின்னர், பொதுக்கூட்ட மேடையிலேயே ஒரு திருமண விழாவும், ஒரு குழந்தைக்குப் பெயர் சூட்டலும் நடைபெற்றன.

இறுதியாக தலைவர் முடிவுரை நிகழ்த்தியதும் நன்றி வழங்கலுடன் கூட்டம் முடிந்தது.

(பொதுச்செயலாளர் சொற்பொழிவு முடியவில்லை.தொடர்ந்து நாளை வெளிவரும்)

## நன்றி!

"பேரன்புடையீர்! வணக்கம் 3—10—54 ஞாயிறன்று நடைபெற்ற திருச்சி 'மாவட்ட' மன்றத் தேர்தலில் தங்கள் மேலான வாக்குகளை அளித்து வெற்றி பெறச் செய்த லால்குடி தொகுதி வாக்காளர்களுக்கும், வெற்றிக்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்டு எல்லா வகையிலும் ஒத்துழைத்த அருமை நண்பர்களுக்கும், பேராதரவு காட்டிய பொதுமக்களுக்கும் வாழ்த்துகள் வழங்கிய தோழர்களுக்கும் என் இதய பூர்வமான நன்றியறிதலுள்ள வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

அன்பன்,

அன்பில் - தர்மலிங்கம்

லால்குடி, 13-10-54

### திருக்குறள் வகுப்பு

19—10—54 பிற்பகல் 2-30 மணிக்கு: சென்னை, கொண்டித்தோப்பு, எண். 15, முத்துகிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில், தோழியர் எஸ். தருமாம்பாள் தலைமையில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். 'இனியவை கூறல்' என்பது குறித்து தோழர் மயிலை சிவமுத்து பேசுவார். தோழியர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.